பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kalaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 ஆவணி 04 வியாழக்கிழமை 20.08.2020 கதிர் 154

## சனிக்கிழமை முதல் மின்வெட்டு இல்லை

நாளை மறுதினம் சனிக்கிழமை தொடக்கம் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படாது என்று இலங்கை மின்சார சபை அறிவித்துள்ளது.

நாடுமுழுவதும் தடங்களின்றிய மின் விநியோகத்தை நாளை மறுதினம் முன் னெடுக்க முடியும் என்று மின்சார சபை சுட்டிக் காட்டியுள்ளது.

2

# சுயநிர்ணய உரிமை பெற தமிழருக்கு உரித்து உண்டு

## விக்னேஸ்வரன் சபையில் கன்னி உரை

கொழும்பு, ஒக 20

வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்கள் தேசம் என்ற அடிப்படையில் சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள். அவர்களின் உள்ளார்ந்த உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டு வரலாறு பற்றிய தவறான கண்ணோட்டங்கள் களையப்பட்டால் மட்டுமே சுதந்திரமும் சமத்துவமும் இந்த நாட்டில் உதயமாகும் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமான நீதியரசர் விக்னேஸ்வரன் சபையில் வலியுறுத்தினார்.

2

## கொழும்புத்துறையில் ஒருவர் மீது வாள்வெட்டு



(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக 20

யாழ்ப்பாணம், கொழும்புத்துறைப் பகுதியில் ஒருவர் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்திய கும்பல் ஒன்று அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளது.

தாக்குதலுக்குள்ளானவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசா லையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் இன்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றது.

நெடுங்குளத்தைச் சேர்ந்த கவிச்சந்திரன் சிவநேஸ்வரன் (வயது - 25) என்பவரே படுகாயமடைந்தார்.

இரண்டு மோட்டார் சைக்கிளில் வந்த நான்கு பேர் கொண்ட கும்பல், மோட்டார் சைக்கிளில் பயணித்தவரை வழிமறித்து வாள்வெட்டுத் தாக்குதலை நடத்தியது டன் அவர் பயணித்த மோட்டார் சைக்கி ளையும் சேதப்படுத்திவிட்டு அங்கிருந்து தப்பித்தது. பழைய பகையைத் தீர்க்கும் வகையிலேயே இந்தத் தாக்குதல் இடம் பெற்றுள்ளதாக ஆரம்ப விசாரணைகளின் பின் பொலிஸார் தெரிவித்தனர்.

## கனகராயன்குளத்தில் வெடிபொருள்கள் மீட்பு

வவுனியா, ஒக 20

வவுனியா, கனகராயன்குளம் குஞ்சுக்குளம் பகுதியில் நிலத்தில் புதையுண்ட நிலையில் காணப்பட்ட வெடிபொருட்கள் விசேட அதிரடிப் படையினரால் இன்று மீட்கப்பட்டன.

அந்தப் பகுதியில் உள்ள காணி ஒன்றைப் புனரமைப்பு செய்வதற்கான வேலைகள் இடம்பெற்று வந்த நிலையில் நிலத்தில் சந்தேகத்திற்கிடமான பொருள்கள் இருப்பது அவதானிக்கப்பட்டு கனகராயன் குளம் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

சம்பவ இடத்திற்குச் சென்ற பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினர் வெடிக்காத நிலையில் காணப்பட்ட 8 மோட்டார் செல்களை மீட்டுள்ளனர்.

நீதிமன்ற உத்தரவுடன் அந்த வெடிபொருள்கள் செயலிழக்கச் செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முரசுமோட்டைப் பகுதியில் ஐம்பது கிலோ கஞ்சா மீட்பு



### இளம் குடும்பப் பெண் கைது

கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட முரசுமோட்டை பகுதியில் 50 கிலோ எடையுடைய கஞ்சா பொதியுடன் இளம் குடும்பப் பெண் இன்று வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் கிளிநொச்சி இரணைமடு விமானப்படையினரால் வழங்கப்பட்ட தகவல் கிளிநொச்சி புலனாய்வுப்பிரிவுப்

2

## கடற்படைக்குக் காணி வழங்க மாதகல் மக்கள் கடும் எதிர்ப்பு




(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஒக. 20

மாதகல் பகுதியில் அமைந்துள்ள கடற்படை முகாமுக்கு மேலதிகமாக தனியார் காணிகளைச் சுவீகரிக்க நில அளவைத் திணைக்களத்தினர் இன்று வருகை தந்தபோது அப்பகுதி மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தனியார் ஒருவருக்குச் சொந்தமான காணியை நில அளவைத் திணைக்களத்தினர் கடற்படையினருக்காக அளவீடு செய்ய இன்று வருகை தந்திருந்தனர். இதற்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனால் நில அளவைப் பணியைக் கைவிட்டு அவர்கள் திரும்பிச் சென்றனர். இதனால் சிறிது நேரம் அப்பகுதியில் பதற்றமான சூழல் காணப்பட்டது.

2

## புதிய அரசமைப்பு ஊடாக நிரந்தரத் தீர்வு வேண்டும்!

### வலியுறுத்துகின்றார் சித்தார்த்தன்

புதிய அரசமைப்பில் நியாயமான தீர்வொன்று தேசிய இனப்பிரச்சினைக்கு வழங்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

9ஆவது நாடாளுமன்றின் முதல் அமர்வில் இன்று (வியாழக்கிழமை) கலந்து கொண்டு உரையாற்றும்போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது புதிய சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்ட மஹிந்த யாப்பா அபேவர்தனவிற்கு வாழ்த்து தெரிவித்த

2

## நாடாளுமன்றம் நாளை வரை ஒத்திவைப்பு

கொழும்பு, ஒக 20

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆற்றிய அரசின் கொள்கை விளக்க உரையை தொடர்ந்து நாடாளுமன்றத்தின் ஏனைய செயற்பாடுகள் நாளை காலை 09.30 மணி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன என சபை முதல்வர் அமைச்சர் தினேஷ் குணவர்தன அறிவித்தார்.

இதற்கமைய நாளை காலை 9.30 மணிக்கு மீண்டும் நாடாளுமன்றம் கூடும்.

## புதிய சபாநாயகராக யாப்பா இன்று ஏகமனதாகத் தெரிவு

### சபையில் வேறு முக்கிய பதவிகளுக்கும் உறுப்பினர்கள் தெரிவு



கொழும்பு, ஒக 21

இலங்கையின் 9ஆவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராக மஹிந்த யாப்பா அபேவர்தன ஏகமனதாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

முதலாவது சபை அமர்வு நேற்று முற்பகல் 9.30 மணியளவில் ஆரம்பமாகியது. இதன்போது சபாநாயகர் பதவிக்காக மஹிந்த யாப்பா அபேவர்தனவின்

2

## சம்பந்தன், விக்கி, கஜன் உள்ளிட்ட தலைவர்கள் புதிய சபாநாயகருக்குச் சபையில் வாழ்த்துரை!



கொழும்பு, ஒக 21

நாடாளுமன்றத்தில் இன்று புதிய சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்ட மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு கட்சிகளின் தலைவர்கள் வாழ்த்துத் தெரிவித்து உரையாற்றினார்கள்.

ஸ்ரீலங்காபொதுஜனமுன்னணியின் தலைவரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷ, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் பிரேமதாஸ, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் தலைவர் டக்ளஸ் தேவானந்தா, தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரன், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேன, தேசிய காங்கிரஸின் தலைவர்

2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் - The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## புதிய அரசமைப்பு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர், நாட்டில் 70 ஆண்டுகளாக இழுபறியில் உள்ளதும், நாட்டில் பின்னடைவை ஏற்படுத்தியுள்ள தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வைப் பெறும் வகையில் புதிய அரசமைப்பு அமைய வேண்டும் எனக் குறிப்பிட்டார். மேலும் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வை வழங்குவதற்கு மஹிந்த யாப்பா உதவுவார் என தான் நம்புகிறார் எனவும் சித்தார்த்தன் குறிப்பிட்டார்.

## முரசுமோட்டை ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பொறுப்பதிகாரி ஊடாகக் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அதை அடுத்து அவரது வழிநடத்தலில் கிளிநொச்சி தலைமை பொலிஸ் நிலையப் பதில் கடமைப் பொறுப்பதிகாரி சம்பிக்க தலைமையிலான பொலிஸ் குழுவினரால் இந்தக் கஞ்சா பொதிகள் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றை மறைத்து வைத்திருந்த குற்றத்திற்காக இளம் குடும்ப பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளார். இதற்கான சுற்றிவளைப்பு நடவடிக்கையை விமானப்படையினர் மற்றும் புலனாய்வு பிரிவினரின் ஒத்துழைப்புடன் பொலிஸார் மேற்கொண்டிருந்தனர்.

சுற்றிவளைப்பில் வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 50 கிலோ எடையுடைய கஞ்சாப் பொதிகள் மீட்கப்பட்டன்.

கைது செய்யப்பட்ட பெண்ணை நான்கு நாள்கள் தடுத்து வைத்து விசாரணை செய்வதற்கு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் பொலிஸார் அனுமதி கோரியுள்ளனர்.

இந்த கஞ்சா பொதிகள் கைது செய்யப்பட்ட பெண்ணின் கணவரால் கொண்டு வரப்பட்டன எனவும், சுற்றிவளைப்பின் போது அந்த சந்தேக நபர் தப்பியோடியுள்ளார் எனவும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் தொடர்ந்து மேற்கொண்டு வருகின்றனர்.

## புதிய சபாநாயகராக .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பெயரை சபை முதல்வர் தினேஷ் குணவர்தன முன்மொழிந்தார்.

இதனை ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வழிமொழிந்தார். அத்துடன், பிரதி சபாநாயகராக ரஞ்சித் சிலம்பலாபிட்டியவும், குழுக்களின் பிரதித் தலைவராக அங்கஜன் இராமநாதனும் தெரிவு செய்யப்பட்டனர்.

எதிர்க்கட்சித் தலைவராக சஜித் பிரேமதாஸ ஏற்றுக்கொள்ளப்பட்டார். சபை முதல்வராக தினேஷ் குணவர்தனவின் பெயரும், ஆளுங்கட்சி கொறடாவாக ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவும் சபாநாயகரால் ஏற்றுக்கொள்ளப்பட்டனர். கட்சித் தலைவர்களின் புதிய சபாநாயகருக்கான வாழ்த்துரைகள், சபாநாயகரின் நன்றி உரை ஆகியன முடிவடைந்த பின்னர் சபை இன்று மாலை 3 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

## சம்பந்தன், விக்கி, கஜன் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏ.எல்.எம். அதாவுல்லா, மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவர் ரிஷாத் பதியுதீன், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் (புளொட்) தலைவர் த.சித்தார்த்தன், தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச, புதிய ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்), ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார, இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஜீவன் தொண்டமான், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் உட்பட்டவர்கள் சபாநாயகருக்கு வாழ்த்துத் தெரிவித்து சபையில் உரையாற்றினார்கள்.

## சுயநிர்ணய உரிமை பெற .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
9 ஆவது பாராளுமன்றத்தின் கன்னி அமர்வு இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகிய பின்னர் புதிய சபாநாயகராக தெரிவு செய்யப்பட்ட மஹிந்த யாப்பா அபேவர்தனவுக்கு வாழ்த்து தெரிவித்தபோதே நீதியரசர் விக்னேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

தனது பேச்சை தமிழில் ஆரம்பித்த நீதியரசர் விக்னேஸ்வரன், உலகில் உயிர்வாழும் மூத்த மொழிகளில் ஒன்று தமிழ் என்றும் இலங்கையின் முதல் சுதேச குடிமக்களின் மொழி தமிழ் என்றும் அந்த தமிழ் மொழியில் தனது உரையை ஆரம்பிப்பதாகவும் கூறி பின்னர் ஆங்கிலத்தில் உரையாற்றி சிங்கள மொழியில் தனது உரையை நிறைவு செய்தார்.

அவர் தனது உரையில் -

தமிழ் மக்கள் தேசிய கூட்டணி சார்பில் முதற்கண் என் வாழ்த்தை தெரிவித்துக்கொள்கிறேன். உலகில் உயிர்வாழும் மூத்த மொழிகளில் ஒன்றும் இந்த நாட்டின் முதல் சுதேச குடிமக்களின் மொழியுமாகிய எனது தாய் மொழியிலும் ஆரம்பித்து பின்னர் எல்லா மக்களையும் இணைக்கும் மொழியிலும் எனது வாழ்த்தைக் கூறுகின்றேன். எமது நாடாளுமன்ற பாரம்பரியத்தின் மிக உயர் பதவியை ஏற்றுக்கொண்டுள்ளமைக்காக உங்களுக்கு நன்றி கூறுகின்றேன் - என்றார்.

சபாநாயகராக தெரிவு செய்யப்பட்ட மஹிந்த யாப்பா அபேவர்தன தனது நீண்ட அரசியல் பயணத்தின் ஊடாக பெற்றுக்கொண்டுள்ள அனுபவத்தை சபாநாயகர் பதவிக்கு நல்லமுறையில் பயன்படுத்துவார் என்றும் விக்னேஸ்வரன் நம்பிக்கை வெளியிட்டார்.

இன்றைய அரசு மிகவும் பலமான நிலையில் இருக்கிறது என்று சுட்டிக்காட்டி அதேபோல மறைந்த ஜே. ஆர். ஜெயவர்தனவின் கீழ் யானைப் பலத்துடன் 1977 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசிய கட்சி 1983 ஆம் ஆண்டு இனக் கலவரத்தை ஏற்படுத்தி இன்று ஒரே ஒரு உறுப்பினர் என அளவுக்கு அதன் பலம் சுருங்கிவிட்டதாக தனதுரையில் கோடிட்டு காட்டிய நீதியரசர் விக்னேஸ்வரன், அதே பிழையை தற்போதைய பொதுஜன பெரமுன அரசும் விட்டு அதே பாதையை தெரிவு செய்யாது என்று நம்புவதாக கூறினார்.

எமக்கு இப்பொழுது மிகவும் பலமான ஒரு அரசாங்கம் அமைந்துள்ளது. 1977 ஆம் ஆண்டு இதேமாதிரியான ஒரு அரசு ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் கீழ் இருந்தது. அந்த ஆட்சியின்போதே 1983 ஆம் ஆண்டு கலவரம் இடம்பெற்றது. அந்த காலத்து யானையாக இருந்து இன்று தனி ஒரு உறுப்பினராக குறுகிப்போயுள்ள பாதையை இந்த அரசும் நிச்சயமாக எதிர்காலத்தில் தொடரக்கூடும். ஆனால் அவர்கள் அவ்வாறு செய்யமாட்டார்கள் என்று நம்புகிறேன். கடந்த காலத்தில் நாம் விட்ட பிழைகளில் இருந்து பாடம் படித்து எல்லா சமூகங்களும் ஒருவருக்கு ஒருவர் மதிப்புடனும் சமனாகவும் உணருகின்ற வகையிலும் இலங்கை தாய் நாட்டின் பிள்ளைகள் நாம் என்ற இறைமையுடனும் பெருமையுடனும் நடைபோடும் வகையிலுமான சமாதானமும் செழிப்பும் மிக்க ஒரு காலத்தை ஏற்படுத்துவார்கள் என்றும் நம்புகிறேன். என்று கூறினார்.

தமிழ் மக்களின் சுய நிர்ணய உரிமை பற்றி அழுத்தம் திருத்தமாக தனது உரையில் விக்னேஸ்வரன் வலியுறுத்தினார்.

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கையுடன் மரபு, பாரம்பரிய உரிமைகளின் அடிப்படையில் தேசம் என்று அங்கீகரிக்கப்படுவதன் பிரகாரம் சுய நிர்ணய உரிமைக்கு உரித்துடைய வடக்கு - கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் உள்ளார்ந்த உரிமைகளை அங்கீகரிப்பதுடன் கடந்த காலம் பற்றிய தவறான வரலாற்று கண்ணோட்டங்களை களைந்தால் மட்டுமே சுதந்திரமும் சமத்துவமும் உதயமாக முடியும் என்று கூறினார்.

சிங்கள மேலாதிக்க அதிகாரத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என்பதையும் நீதியரசர் தனது இந்த உரையில் திட்டவட்டமாக குறிப்பிட்டார்.

சபாநாயகர் அவர்களே, பௌத்த மதத்தை பின்பற்றும் ஒரு நாட்டிலே, மேலாதிக்க அதிகார பிரயோகத்தை நாங்கள் எவரிடம் இருந்தும் எதிர்பார்க்கவேண்டியதில்லை. ஏனென்றால், சிங்கள கிராமத்தவர்கள், ஒவ்வொரு வினைக்கும் எதிர் வினை இருக்கும் என்பதற்காக பின்வரும் பழமொழியை கூறுவார்கள் என்பது எமக்கு தெரியும். அதாவது, (கல கல பே பல பல வே) முற்பகல் செய்த வினை பிற்பகல் விளையும் என்பதே அது. என்று கூறினார்.

# பல்கலை மாணவரின் அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்க!

## கலைப்பீட மாணவர் ஒன்றியம் கோரிக்கை

யாழ்.பல்கலைக்கழக மாணவர்களுக்கான அடிப்படை உதவிகளையும் வசதிகளையும் ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென பல்கலைக்கழக பேரவையிடமும் துணைவேந்தரிடமும் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக் குழுவிடமும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட மாணவர் ஒன்றியம், இன்று (வியாழக்கிழமை) ஊடக சந்திப்பொன்றை நடாத்தியுள்ளது. இதன்போதே இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும் கொரோனோ அபாய காலத்தில் பல்கலைக்கழகத்தில் கற்றல் செயற்பாடுகள் நடைபெறாததால் விடுதிகளிலும் வாடகை வீடுகளிலும் தங்கியிருந்த மாணவர்கள் வெளியேறியிருந்த நிலையில் தற்போது அதற்கான வாடகைகளை தருமாறு உரிமையாளர்கள் கோருகின்றனர்.

பல்கலைக்கழகத்தில் மிகவும் வறுமைப்பட்ட மாணவர்களே கல்வி கற்கின்ற நிலையில் இந்த வாடகைத் தொகையைக் கூட செலுத்த முடியாமல் அவதிப்படுகின்றனர். இதற்கான தீர்வொன்றையும் வழங்க வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## சனிக்கிழமை முதல் .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நுரைச்சோழை மின் உற்பத்தி நிலையம் செயலிழந்ததால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை முதல் சுழற்சி முறையில் மின்வெட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

## கடற்படைக்குக் ............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏராளமான பொலிஸாரும் கடற்படையினரும் அந்தப் பகுதியில் குவிக்கப்பட்டிருந்தனர். போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை அங்கிருந்து வெளியேற்றிய பொலிஸார், காணி உரிமையாளரை அழைத்து பேசியிருந்தனர். காணி உரிமையாளர்களுடன் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் சட்ட ஆலோசகரும் சட்டத்தரணியுமான கனகரட்னம் சுகாஷ் சென்று கடற்படை மற்றும் பொலிஸாருடன் பேசினார்.

இதன்போது காணி உரிமையாளர்கள் காணியை வழங்க மறுத்த நிலையில் நில அளவைத் திணைக்களத்தினர் அங்கிருந்து வெளியயேறினர்.




# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் -kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஐ.தே.க., சு.கவுக்கு ஏன் இந்த நிலை?

சுதந்திர இலங்கையில் கடந்த மார்ச் வரை சுமார் எழுபத்தியிரண்டு ஆண்டுகள் மாறிமாறி ஆட்சி அதிகாரத்தில் கோலோச்சி, இலங்கைத் தீவை வழி நடத்திக் கொண்டிருந்த இரண்டு பிரதான சிங்களக் கட்சிகளினதும் நிலைமை பரிதாபத்திற்குரியதாகியுள்ளது.

முன்னைய நாடாளுமன்றம் கலைக்கப்படும் வரை ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைமை பெரும் பச்சாதாபத்துக்குரியது.

இப்போது நடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் வரை, விருப்பு வாக்குகளில் பெரும் சாதனை படைத்திருந்தவர் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. 2015 பொதுத் தேர்தலில் கொழும்பு மாவட்டத்தில் தனித்து ஐந்து லட்சத்துக்கும் மேற்பட்ட விருப்பு வாக்குகளைப் பெற்றவர் அவர். ஆனால், அதற்கு அடுத்த தேர்தலில் – கடந்த 5 ஆம் திகதி நடைபெற்ற பொதுத் தேர்தலில் – விருப்பு வாக்கு எண்ணக் கூடிய தகுதி நிலைக்குக் கூட அவரது கட்சி தேறவில்லை.

இலங்கையின் எழுபத்தியிரண்டு ஆண்டு கால சரித்திரத்தை நாடாளுமன்ற அதிகாரம் மூலம் எழுதிய ஐக்கிய தேசிக் கட்சி, இப்போது அடியோடு தூக்கிக் கடாசப்பட்டிருக்கின்றது.

அந்தக் கட்சியிலிருந்து மாவட்ட ரீதியில் ஓர் எம்.பி.கூடத் தெரிவாகவில்லை. தேசிய ரீதியில் முழு நாட்டிலும் விழுந்த வாக்குகளின் அடிப்படையில், தேசியப் பட்டியலில் நியமனம் பெறுவதற்கு ஓர் ஆசனம் அக்கட்சிக்குக் கிடைத்துள்ளது. தேசியப் பட்டியலில் கூட முழுமையாக ஓர் ஆசனம் பெறுவதற்கான வாக்கு எண்ணிக்கை அதற்குக் கிட்டவில்லை.

கட்சிகளுக்கான தேசியப் பட்டியல் ஆசனங்களை ஒதுக்குவதற்கு தேவையான முழுத் தொகையை அந்தந்தக் கட்சிகளுக்கு வழங்கிய பின்னர், மிச்சமிருந்த ஆசன ஒதுக்கீட்டிலேயே, அத் தேவையின் பகுதியை மட்டும் வாக்குகளாகக் கொண்டிருந்த ஐ.தே.கட்சி போன்றவை ஆளுக்கொரு ஆசனத்தைப் பெற்றன.

இன்றைய நாடாளுமன்ற அமர்வுக்கு ஐ.தே.கட்சியின் அந்த ஓர் ஆசனமும் கூட பிரதிநிதித்துவப்படுத்தப்படவில்லை. யார் அந்த எம்.பி.பதவியைப் பெறுவது என்ற உள்குத்து வெட்டுக் காரணமாக அப்பிரதிநிதித்துவம் இன்னும் நிரப்பப்படவில்லை.

இதேபோன்று கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையே மற்றைய தென்னிலங்கையின் பிரதான கட்சியான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் நிலையுமாகும்.

மக்கள் செல்வாக்கை ஈட்டியிருக்கும் ராஜபக்ஷக்களின் பொதுஜனப் பெரமுனவுடன் கூட்டுச் சேர்ந்து – அணி கட்டி – பொதுத் தேர்தலை எதிர்கொண்டமையால் பதினாறு எம்.பிக்களை சுதந்திரக் கட்சி ஈட்டி, வரலாற்றுப் பெரும் பின்னடைவில் இருந்து தன்னைக் காப்பாற்றிக் கொண்டது.

ஆனாலும் அக்கட்சித் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிலிருந்து கட்சி முக்கியஸ்தவர்கள் பலரும் பெரும்பாலும் ஓரம்கட்டி ஒதுக்கப்பட்டே உள்ளனர்.

இப்படி ஐ.தே.க. மற்றும் சு.க. ஆகியனவும் அவற்றின் தலைவர்களும் ஓரங்கட்டி, ஒதுக்கப்பட்டிருக்கின்றமைக்கு உரிய காரணங்கள் உள.

அக்கட்சிகளின் தலைவர்கள் அதனைப் புரிந்து கொண்டார்களா – உணர்ந்து கொண்டார்களா – என்பது கேள்விக் குறியே.

இந்த நாட்டில் சுமார் பத்து ஆண்டுகள் – 2005 முதல் 2015 வரை – இருண்ட யுக ஆட்சி நீடித்தது. அதனால் நாட்டின் ஜனநாயகத்துக்கும், சுபீட்சத்துக்கும், இன ஐக்கியத்துக்கும், ஒற்றுமைக்கும் பேராபத்து நேர்ந்தது.

அந்தப் பேராபத்திலிருந்து நாட்டையும், மக்களையும் மீட்டு நிலை நிறுத்துவதற்கான கூட்டுப் பொறுப்பையே 2015 நல்லாட்சி அரசின் மூலம் இந்தத் தலைவர்கள் நிறைவேற்ற முயன்றனர்.

இயற்கை நீதியின் அடிப்படையிலான இந்த முயற்சிக்கு தார்மீக ரீதியிலான ஆதரவு பல தரப்புகளிடமிருந்தும் வந்து குவிந்தன.

அதனைப் பயன்படுத்தி, இந்த நாட்டுக்கு நீதி, நியாயமான அரசியல் தீர்வும், வாழ்க்கை முறையும் சட்டத்தின் ஆட்சியும் கொண்டு வரப்படும் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், இக் கட்சிகளின் தலைவர்கள் அந்த வரலாற்றுப் பொறுப்பை மறந்து – மறைத்து – பதவிகளுக்காகவும், அதிகாரங்களுக்காகவும் தமக்குள் போட்டியிட்டு மோதி எல்லாவற்றையும் குட்டிச்சுவராக்கினர்.

அதன் விளைவையே – விபரீதத்தையே – அவர்கள் இப்போது அறுவடை செய்ய வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

ஆக, மொத்தத்தில் சு.க மற்றும் ஐ.தே.கட்சிகளினதும், அக் கட்சிகளின் தலைவர்களினதும் வாழ்வும் அரசியலும் மண்ணாகியது இந்தக் குளறுபடியால்தான்.!

# யாழ். மாவட்டத்தில் விபத்துகள் அதிகரிப்பு வேகம் குறைத்து விவேகமாக செயற்படுக!

## வைத்தியர் யமுனானந்தா அறிவுரை



யாழ் மாவட்டத்தில் தற்போது வீதி விபத்துக்கள் அதிகரித்து காணப்படுகின்றன. வேகத்தைக் குறைத்து விவேகமாகச் செயற்படுவதன் மூலமே விபத்துக்களைக் குறைக்க முடியும் என யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் வைத்தியர் சி. யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் அதிகரித்துள்ள வீதி விபத்துக்கள் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது வீதி விபத்துகள் அதிகரித்து காணப்படுகின்றன.

கொரோனா தாக்கத்தின் பின் போக்குவரத்து முடக்கங்கள் காணப்பட்டதன் காரணமாக விபத்துக்கள் குறைந்து காணப்பட்டது இலங்கையிலேயே வீதி விபத்துகளால் இறப்பு ஏற்படும் வாய்ப்புகள் இல்லை என்ற நிலை இருந்தது

ஆனால் 6 மாதத்திற்குப் பின்னர் வீதி விபத்துக்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது. கடந்த மாதம் மட்டும் யாழ் வைத்தியசாலையில் சுமார் 180 பேர் வீதி விபத்துக்களால் காயப்பட்டு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள் ஒரு சிலர் இறந்துள்ளார்கள் பலர் வீதி விபத்துக்கள் இடம்பெற்ற ஸ்தலத்திலேயே இறந்துள்ளார்கள்

இந்நிலையிலே வீதி விபத்துக்கள் எவ்வாறு ஏற்படுகின்றன அவற்றை எவ்வாறு தவிர்ப்பது என்பது பற்றிய விழிப்புணர்வுகளை ஏற்படுத்த வேண்டும்

பொதுவாக வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்ட வீதி விபத்துக்களை ஆராய்ந்த போது பாதசாரிகளை வாகனங்கள் மோதி வீதிகளிலே காயப்பட்டு நினைவிழந்த நிலையில் வைத்தியசாலைக்கு அனுமதிக்கப்படுகிறார்கள் குறிப்பாக ஒரு டிப்பர் அடித்ததால் ஏற்பட்ட விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் காயமடைந்தார் குறித்த விபத்து போன்ற விபத்துகளால் கடுமையான காயங்களிற்குட்பட்டவர்கள் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை விபத்து பிரிவினை எடுத்துக்கொண்டால் விபத்து பிரிவில் 70 சதவீதமானவர்கள் வீதி விபத்துக்களால் காயமடைந்து நிரந்தர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவர்களாக காணப்படுகின்றார்கள்

மேலும் வீதி விபத்துக்களின் போது பாதசாரிகளால் ஏற்படுகின்ற விபத்து இருக்கின்றது மோட்டார் சாரதிகளுக்கு ஏற்படுகின்ற விபத்து இருக்கின்றது குறிப்பாக மோட்டார் சைக்கிளில் செல்பவர்கள் வீதி விபத்துக்களிற்குள்ளாகும் தன்மை அதிகமாக காணப்படுகின்றது

நாய்கள் குறுக்கே பாயும் போது ஏற்படுகின்ற விபத்து காணப்படுகின்றது அடுத்ததாக யாழ் மாவட்டத்தில் நகரத்தை அண்டிய பகுதிகளில் வேகத்தின் காரணமாக வீதி விபத்துக்கள் ஏற்படுகின்றன இலுப்பையடிசந்தி, நாவலர் வீதி போன்ற பகுதிகளில் சனநெரிசல் அதிகமாகக் காணப்படுவதன் காரணமாக இந்த வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமைகின்றன

அடுத்ததாக போக்குவரத்து அதிகரித்துள்ளதன் காரணமாக விபத்துகள் அதிகரிக்கின்றன குறிப்பாக கொழும்பை நோக்கிய போக்குவரத்துக்கள் யாழ் நகரிலிருந்து தொடங்காமல் காங்கேசன்துறையில் அல்லது மானிப்பாய் போன்ற பகுதிகளில் தொடங்கும் போது அந்தப் பேருந்துகள் விரைவாக சாதாரண வீதிகளில் பயணிக்கும் போது இந்த விபத்துக்கள் ஏற்படுகின்றன போக்குவரத்து நெரிசலும் ஏற்படுகின்றது

அதேபோல் கனரக வாகனங்கள் பாவனையினை நகர வீதிகளில் மட்டுப்படுத்தினால் இந்த விபத்துகளை குறைக்கலாம் அத்தோடு அந்த கனரக வாகனங்கள் மிகவும் வேகமாக பயணிப்பதும் இந்த விபத்துகளுக்கு காரணமாக அமையலாம்

நகரப்பகுதிகளில் கனரக வாகனங்கள் பயணிக்கின்ற தன்மை தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது பாடசாலைகள் ஆரம்பிக்கப்பட்ட பின் பாடசாலை வீதிகளில் நெரிசல் காணப்படுகின்ற போதிலும் விரைவாக வேலைக்கு செல்ல வேண்டும் பாடசாலைக்கு செல்ல வேண்டும் என்ற நோக்கத்தில் வேகமாக செல்லும் போதும் இந்த விபத்துக்கள் ஏற்படுகின்றன.

எனவே வேகத்தை குறைத்து விவேகமாக பயணிப்பதன் மூலம் யாழ்ப்பாண மாவட்டத்தில் விபத்துக்களை கட்டுப்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

# காணாமல் போனோர் உறவுகளின் அலுவலகம் அம்பாறையில் உடைப்பு; எச்சரிக்கையும் விடுப்பு!

அம்பாறை திருக்கோவில் பகுதியிலுள்ள அம்பாறை மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்க காரியாலயத்தில் அமைக்கப்பட்டிருந்த பெயர் பலகை இனந்தெரியாதோரால் உடைக்கப்பட்டு, அதில் எச்சரிக்கை அறிக்கையொன்று ஒட்டப்பட்ட சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று (புதன்கிழமை) இரவு, இடம்பெற்றதாக வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க தலைவி செல்வராணி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது –

தம்பிலுவில் மத்திய சந்தை கட்டடத்தில் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்க காரியாலயத்தில் பொருத்தப்பட்டிருந்த பெயர் பதாதையை, இனந்தெரியாத சந்தேகநபர்கள், நேற்று இரவு அடித்து உடைத்துள்ளனர்., அதில் ஒரு துண்டுபிரசுரத்தை ஒட்டிவைத்துவிட்டு அவர்கள் சென்றுள்ளனர்

"இதேபோன்றுதான் உனக்கும் செய்வோம்" என அத்துண்டு பிரசுரத்தில் எழுதப்பட்டு உள்ளது. இது ஒரு அடாவடித்தனம்.

இன்று தொலைத்துவிட்டு தேடுவது எங்களது உறவுகளை, நாங்கள் எவருக்கும் எதுவும் செய்யவில்லை யாருடனும் எதுவித பிரச்சினைக்கும் செல்லவில்லை

நாங்கள் எங்களது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை நிலை தெரியவேண்டும் எனத்தான் இந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சங்கத்தை வைத்து போராடி வருகின்றோம்.

இதனை செய்தவர்கள் யார் என எங்களுக்குத் தெரியாது. எனினும் அவர்களை விரைவில் கண்டுபிடிப்போம். இதேவேளை இது தொடர்பாக ஐ.நா.சபை, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், மனித உரிமை ஆணையகம், திருக்கோவில் பொலிஸ் அதிகாரிகளுக்கு அறிவித்திருக்கின்றோம். இந்த செயற்பாட்டையிட்டு நாங்கள் கவலையடைகின்றோம்

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் இம்மாதம் 30 ஆம் திகதி, சர்வதேச காணாமல் ஆக்கப்பட்ட தினத்தில் போராட்டமொன்றை நடத்த இருக்கும் நிலையில் இந்த செயற்பாட்டைஏன்செய்தார்கள்எனத்தெரியவில்லை.

இதனை யார் செய்தாலும் எங்களது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் உண்மை நிலை தெரியும் வரை போராட்டத்தைத் தொடருவோம்.

இப்போது எங்களது உயிருக்கு யார் உத்தரவாதம். இந்தச் செயற்பாடு எங்களுக்கு அச்சத்தையும் பயத்தையும் ஏற்படுத்தியுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# கர்நாடகாவில் கடும் மழை வெள்ளத்தால் 19 பேர் சாவு!



கர்நாடக மாநிலத்தில் கடந்த 2 வாரங்களாக பெய்து வரும் கடும் மழை வெள்ளத்தால் ஏற்பட்ட அனர்த்தத்தில் சிக்கி 19 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்தோடு, இந்த அனர்த்தத்தில் சிக்கி 63 கால் நடைகளும் உயிரிழந்துள்ளன.

தென்மேற்கு பருவமழை தீவிரம் அடைந்துள்ளதால், கர்நாடக மாநிலத்தின் தெற்கு, வடக்கு மற்றும் கடலோர மாவட்டங்களில் கன மழை பெய்து வருகிறது.

கடந்த முதலாம் திகதி முதல் தற்போது வரை மழை வெள்ளத்தில் சிக்கி 19 பேர் உயிரிழந்துள்ளனர் என மாநில இயற்கை பேரிடர் கண்காணிப்பு மையம் தெரிவித்துள்ளது.

இதேநேரம், அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட 3 ஆயிரத்து 810 பேர் 104 நிவாரண முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேலும் 5 ஆயிரத்து 500 வீடுகள் சேதம் அடைந்த நிலையில் 216 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளன.

அதேவேளை, 60 ஆயிரம் ஏக்கர் பயிர்களும் 50 ஆயிரம் ஹெக்டர் தோட்டக்கலை பயிர்களும் சேதமடைந்துள்ளன. பல மாவட்டங்கள் வெள்ளத்தில் மிதக்கும் நிலையில், ஆனேகுந்தியில் உள்ள கிருஷ்ணதேவராய கோவில் நீரில் மூழ்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 28 லட்சத்தைக் கடந்தது கொரோனா பாதித்தோர்!



இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 28 லட்சத்தை கடந்துள்ளது.

இதன்படி நேற்று ஒரேநாளில் 69 ஆயிரத்து 196 பேர் புதிய தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். இதனையடுத்து பாதிக்கப்பட்டுள்ள மொத்த தொற்றாளர்களின் எண்ணிக்கை 28 இலட்சத்து 35 ஆயிரத்து 822 ஆக அதிகரித்துள்ளது.

அத்துடன் 980 பேர் புதிதாக உயிரிழந்துள்ள நிலையில், உயிரிழந்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 53 ஆயிரத்து 994 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் இந்தத் தொற்றில் இருந்து குணமடைந்துள்ளவர்களின் மொத்த எண்ணிக்கை 20 இலட்சத்து 96 ஆயிரத்தைக் கடந்துள்ளதுடன் 6 இலட்சத்து 85 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர் என மத்திய சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

## 10 ஆயிரம் துணை இராணுவத்தை காஷ்மீரிலிருந்து மீளப்பெற்றது அரசு!



ஜம்மு – காஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் நிறுத்தப்பட்டிருக்கும் 10 ஆயிரம் துணை இராணுவப் படையினரை உடனடியாக திரும்பப்பெறுவதாக மத்திய அரசு அறிவித்துள்ளது.

காஷ்மீருக்கான சிறப்பு அதிகாரம் இரத்து செய்யப்பட்டுள்ள நிலையில், தற்போதைய நிலைவரம் தொடர்பாக ஆய்வு செய்யும் வகையில் இடம்பெற்ற உள்துறை அமைச்சகத்தின் ஆலோசனைக் கூட்டத்தில் மேற்படி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனைத்தொடர்ந்து மத்திய ரிசர்வ் படையினர், எல்லை பாதுகாப்பு படையினர் மற்றும் மத்திய தொழிற் பாதுகாப்புப் படையினர் ஆகிய பிரிவுகளைச் சேர்ந்த 10 ஆயிரம் வீரர்களை மீளப் பெறும் நடைமுறை உடனடியாக அமுலுக்கு வருவதாக உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

ஜம்மு – காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து இரத்து செய்யப்பட்டு ஜம்மு – காஷ்மீர் மற்றும் லடாக் என 2 யூனியன் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டது. இந்த நடவடிக்கைகளின்போது காஷ்மீர் பள்ளத்தாக்கு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டது.

அசம்பாவித சம்பவங்கள் நடைபெறாமல் இருக்க நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்த கூடுதல் பாதுகாப்புப் படையினர் காஷ்மீருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## 1000 ஆண்டுகள் நீடிக்கும் கோவில் அயோத்தியில் இராமருக்கு அமைப்பு!



*அயோத்தியில் கட்டப்பட்டு வரும் ராமர் கோவில் ஆயிரம் ஆண்டுகளுக்கு நீடிக்கும் வகையில் கற்களால் கட்டப்பட்டு வருவதாக கோவில் கட்டுமானத்தை மேற்கொண்டுள்ள அறக்கட்டளை தெரிவித்துள்ளது.*

*இது தொடர்பாகக் கருத்து தெரிவித்துள்ள ராம ஜென்ம பூமி தீர்த்த சேத்திரா அறக்கட்டளையின் பொதுச் செயலாளர் சம்பத் ராய் 'சென்னை ஐ.ஐ.டி மத்திய கட்டட ஆய்வு நிறுவனம் உள்ளிட்ட நிறுவனங்களின் மிகப்பெரிய நிபுணர்கள்' ராமர் கோவில் கட்டுமானப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனக் குறிப்பிட்டார்.*

*அத்துடன் அயோத்தி கோவில் நிலத்தின் மண்வளம் நிலநடுக்கத்தைத் தாங்கும் வலிமை போன்றவற்றை சென்னை ஐ.ஐ.டி நிபுணர்கள் ஆராய்ந்து வருகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.*

*மேலும் கோவில் கட்டுமானத்துக்காக 10 ஆயிரம் தாமிர கம்பிகள் தேவைப்படுகின்றன எனவும், பக்தர்கள் தாமிரக் கம்பிகளை கோவிலுக்குத் தானமாக வழங்கலாம் என்றும் அவர் கூறியுள்ளார்.*

## துருப்புக்களை முன்நோக்கி நகர்த்த லே பகுதியில் புதிய பாதை அமைப்பு!

அண்டை நாடுகளின் தாக்குதல்களில் இருந்து பாதுகாக்கும் வகையில் லே பகுதியில் புதிய பாதை அமைக்கும் பணியை இந்தியா ஆரம்பித்துள்ளது.

எதிரிநாட்டு படைகளின் கண்களில் படாமல் துருப்புக்களை இலகுவாக முன்னோக்கி நகர்த்தி செல்ல இந்த பாதை ஏதுவாக அமையும் என இந்தியா தெரிவித்துள்ளது.

இதன்படி மணாலி அருகே உள்ள ஜோஜிலா என்ற இடத்தில் இருந்து லே பகுதிவரை குறித்த பாதை அமைக்கப்படவுள்ளது.

ஏற்கனவே இரு பாதைகள் இருக்கும் பட்சத்தில் 3ஆவதாக அமைக்கப்படும் ,ந்த பாதையின் வழியாக எதிரிகளின் கண்களுக்குத் தெரியாமல் பீரங்கிகள், வாகனங்கள் மற்றும் துருப்புகளை மிகவும் விரைவாகக் கொண்டு செல்ல முடியும் எனக் கூறப்பட்டுள்ளதுடன், இந்த புதிய பாதையின் மூலம் சுமார் 3 முதல் 4 மணி நேரம் வரை பயண நேரம் மிச்சமாகும் என்றும் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

## புதிய கல்விக் கொள்கையை நடைமுறைப்படுத்தக் குழு!

### உத்தரப் பிரதேச அரசு திட்டம்

புதிய கல்விக் கொள்கையை அமுல்படுத்த 17 பேர் கொண்ட குழுவை அமைக்க உள்ளதாக உத்தரப் பிரதேச அரசு அறிவித்துள்ளது.

முதல்வர் அலுவலகத்தின் அதிகாரபூர்வ ருவிட்டர் பக்கத்தில் இது தொடர்பான அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி இந்த குழுவின் தலைவராக உத்தரப்பிரதேசத்தின் துணை தலைவரான தினேஷ் சர்மா நியமிக்கப்பட்டுள்ள அதேவேளை மாநில அடிப்படைக் கல்வித் துறை அமைச்சர் சதிஷ் த்விவேதி துணைத் தலைவராக இருப்பார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவின் புதிய கல்விக் கொள்கையை கடந்த ஜூலை மாதம் 29 ஆம் திகதி மத்திய அரசு வெளியிட்டது.

அதில் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதம் கல்விக்கு ஒதுக்குவது, தொழில்முறைக் கல்வி நெகிழ்வான பாடத்திட்டங்கள், பாடங்களில் படைப்புச் சேர்க்கைகள், ஒருங்கிணைந்த தொழில் கல்வி மற்றும் உரிய சான்றிதழ்களுடன் பல்முனை நுழைவு வெளியேறுதல், ஆய்வுகளுக்காக அதிக நிதி ஒதுக்குவது, ஐந் தாம் வகுப்பு வரை தாய் மொழிக் கல்வி, மும்மொழிக் கொள்கை ஆகியவற்றில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## 100 செயற்கை சுவாசக் கருவிகளை இந்தியாவுக்கு அனுப்பியது அமெரிக்கா!

அமெரிக்காவில் இருந்து 100 செயற்கை சுவாச கருவிகள் இந்தியாவிற்கு நன்கொடையாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ரொனால்ட் ட்ரம்ப் இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் தொலைபேசி வாயிலாகக் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது இந்திய – சீன எல்லைப்பிரச்சினை மற்றும் கொரோனா வைரஸ் தொற்று பரவல் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டுள்ளது. இதனையடுத்தே 100 செயற்கை சுவாச கருவிகளை நன்கொடையாக வழங்க அமெரிக்கா முன்வந்துள்ளது. இதன்படி நேற்று 100 கருவிகள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# ஐரோப்பாவுக்குள் நுழைய முயன்ற கப்பல் லிபிய எல்லையில் விபத்து; 45 பேர் சாவு!

ஐரோப்பாவுக்குள் நுழைய முயன்ற குடியேறிகளின் கப்பல், லிபிய கடல் எல்லையில் மூழ்கியதில் குழந்தைகள் உட்பட 45 பேர் உயிரிழந்துள்ளனர் என ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் உயர் ஆணையம் தெரிவித்துள்ளது.

ஸ்வாரா நகரின் கடற்கரையோரத்தில் வைத்து கப்பலின் பொறி இயந்திரம் வெடித்ததால் இந்த விபத்து சம்பவித்துள்ளது.

இந்த கப்பல் விபத்துக்குள்ளானபோது அதில் 80 இற்கும் மேற்பட்டவர்கள் இருந்தனர் எனவும் விபத்திலிருந்து உயிர் தப்பிய 37 பேர் உள்ளூர் மீனவர்களால் மீட்கப்பட்டனர் எனவும் அகதிகள் உயர் ஆணையம் குறிப்பிட்டுள்ளது.

ஆனால், இன்னொரு சர்வதேச ஊடகம், 117 பேர் காணமால் போயுள்ளனர் எனவும் மூன்று பேர் மீட்கப்பட்டுள்ளனர் எனவும் செய்தி வெளியிட்டுள்ளது.



இந்த ஆண்டு நடந்த மிகவும் மோசமான கப்பல் விபத்து இதுவென விவரிக்கப்பட்டுள்ளது.

லிபியாவில் இருந்து கடல் கடந்து ஐரோப்பாவுக்குள் நுழைய முயன்ற 300 இற்கும் மேற்பட்டவர்கள் இந்த ஆண்டு உயிரிழந்துள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

எனினும், உயிரிழப்புகளின் உண்மையான எண்ணிக்கை மேலும் அதிகமாக இருக்கக் கூடும் என நம்பப்படுகின்றது.

லிபியாவில் ஆட்சியிலிருந்த மும்மார் கடாஃபி 2011ஆம் ஆண்டு ஆட்சியிலிருந்து நீக்கப்பட்டு கொல்லப்பட்ட பின்னர், குடியேறிகள் ஐரோப்பாவுக்குள் நுழைய முயலும் முக்கிய நாடாக லிபியா உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜிமெயில் பயன்பாட்டில் தொழினுட்பக் கோளாறு!

உலகம் முழுவதும் ஜிமெயில், கூகுள் டிரைவ் பயன்பாட்டில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டுள்ளதாக பயனர்கள் முறைப்பாடு தெரிவித்து வருகின்றனர்.



இதற்மைய, ஜிமெயிலில் இணைப்புகளை அனுப்பும் போது பல சிக்கலை தாம் எதிர்கொள்கின்றனர் எனப் பயனர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த சில மணி நேரங்களுக்கு முன்பு கூகுள் அப்ளிகேஷன் பக்கத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டமையை அடுத்து சேவையில் பின்னடைவு ஏற்பட்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதனைத்தொடர்ந்து, ஜிமெயில் சேவை முடங்கியது குறித்து கூகுள் நிறுவனம் ஆய்வு செய்து வருவதாகத் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கூகுள் மீட், கூகுள் வோய்ஸ் மற்றும் கூகுள் டாக்ஸ் ஆகியவற்றில் உள்ள சிக்கல்கள் குறித்தும் பயனர்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

இதனிடையே ஜிமெயில் சேவை முடங்கியது குறித்து நெட்டிசன்கள் பலர் சமூக வலைத்தளங்களில் ஜிமெயில் டவுன் என்ற ஹேஷ்டேக்கில் தங்களது குறை, கருத்துக்களைப் பதிவிட்டு வருகின்றனர்.

## பிரித்தானியா, சுவீடன் மருந்து நிறுவனத்துடன் கொரோனா ஊசி தயாரிக்க ஆஸி. ஒப்பந்தம்!

ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகம் உருவாக்கி வரும் கொவிட் - 19 தடுப்பூசியை பொதுமக்கள் பயன்பாட்டுக்காக உற்பத்தி செய்ய, பிரித்தானியா - சுவீடன் மருந்து நிறுவனமான அஸ்ட்ராஸெனெக்குடன் ஆஸ்திரேலிய அரசு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளது.

இதனை பிரதமர் ஸ்கொட் மோரிஸன் நேற்று (புதன்கிழமை) வெளியிட்டுள்ள அறிக்கையில் உறுதிப்படுத்தினார்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், ஆஸ்திரேலிய மக்கள் அனைவருக்கும் அந்தத் தடுப்பூசி இலவசமாகக் கிடைப்பதற்கு வழி ஏற்பட்டுள்ளது எனப் பிரதமர் கூறினார்.

இதுதொடர்பாக பிரதமர் வெளியிட்டுள்ள அறிக்கையில் -

ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகம் தயாரித்துள்ள கொவிட் - 19 தடுப்பூசி மூன்றாம் கட்ட சோதனை நிலையில் உள்ளது. எனவே, அதன் செயற்திறனை நிரூபிப்பதற்கு இன்னும் சில பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது.

அந்த மருந்து, அனைத்துக் கட்ட சோதனைகளிலும் வெற்றியடைந்தால், அதனை 2.5



ஆஸ்திரேலியர்களுக்கும் இலவசமாகக் கிடைக்கச் செய்வதற்கான உற்பத்திப் பணிகள் உடனடியாகத் தொடங்கும் என கூறினார்.

ஆஸ்திரேலியாவில் தற்போது கொவிட் - 19 தொற்று மீண்டும் அதிகரிக்கத் தொடங்கியுள்ளதால், அங்கு பல்வேறு நகரங்கள் முடக்கப்பட்டுள்ளன. கடுமையான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

ஆஸ்திரேலியாவில் இதுவரை 24,236 பேர் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதோடு, 463பேர் உயிரிழந்துள்ளனர்.

## விஷம் அருந்தினார் ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் சேர்ப்பு!

ரஷ்ய எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னி விஷம் அருந்தி, உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இன்று (வியாழக்கிழமை) காலை 44 வயதான அலெக்ஸி நவல்னி, சைபீரியாவில் உள்ள டாம்ஸ்க் நகரிலிருந்து தலைநகர் மாஸ்கோவுக்கு சென்ற விமானத்தில் பயணித்தார்.

இதன்போது, திடீரென்று உடல் நலக் குறைவு ஏற்பட்டதால் விமானம் ஓம்ஸ்கில் அவசர அவசரமாக தரையிறக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இது தொடர்பாக நவல்னியின் செய்தி தொடர்பாளர் தெரிவிக்கையில்-



விஷம் அருந்தியமையால் மயக்கமடைந்த நவல்னி தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள், அவர் சூடான திரவத்தில் விஷம் கலந்து குடித்துள்ளார் எனக் கூறினார்கள். அவர் இன்று காலை தேநீர் மட்டுமே அருந்தியமையால், அதில் விஷம் கலந்து குடித்திருக்கலாம் எனக் கூறினார்.

நவல்னி உயிருக்கு ஆபத்தான நிலையில் உள்ளார் என மருத்துவமனையின் தலைமை மருத்துவரின் அறிக்கையை இணைத்து ரஷ்யாவின் அரசு செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் மாதத்தில் அரசமைப்பு சீர்திருத்தங்கள் மீதான வாக்கெடுப்பு ஒரு சதி என வாதாடிய நவல்னி, அரசையும், ஜனாதிபதி விளாடிமீர் புடினையும் தொடர்ந்து விமர்சித்து வந்தமையால், பலமுறை கைது செய்யப்பட்டு சிறைக்குச் சென்றவர் ஆவார்.

## பெலாரஸிய தேர்தல் முடிவுகளை ஐரோப்பிய ஒன்றியம் ஏற்கவில்லை!



பெலாரஸிய ஜனாதிபதி தேர்தல் முடிவை ஐரோப்பிய ஒன்றியம் அங்கீகரிக்கவில்லை என ஐரோப்பிய சபையின் தலைவர் சார்லஸ் மைக்கேல் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சிறையில் அடைக்கப்பட்டுள்ள நூற்றுக்கணக்கான எதிர்ப்பாளர்களை விடுவிக்க ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஜன்கோவிடம் அழைப்பு விடுத்தார்.

ஜேர்மன் அதிபர் அங்கேலா மேர்க்கெல் உள்ளிட்ட ஐரோப்பிய ஒன்றிய தலைவர்கள், பெலாரஸின் தேர்தல் முடிவை இந்த ஐரோப்பிய ஒன்றியம் அங்கீகரிக்கவில்லை என்று கூறுகிறார்கள்.

இதனிடையே போலந்து மற்றும் லித்துவேனியா எல்லைகளில் இராணுவ இருப்பைப் பலப்படுத்த பெலாரஸின் பாதுகாப்பு அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது என செய்திகள் தெரிவிக்கின்றன.

வழிகாட்டப்பட்ட ஏவுகணைப் பிரிவு, விமான எதிர்ப்பு உபகரணங்கள் மற்றும் ஆளில்லா விமானங்கள் இப்பகுதிக்கு அனுப்பப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில், பெலாரசிய ஜனாதிபதி அலெக்சாண்டர் லுகாஜன்கோ 10 நாள் வீதி ஆர்ப்பாட்டங்கள் மற்றும் சர்ச்சைக்குரிய தேர்தல்களால் தூண்டப்பட்ட வேலைநிறுத்தங்களுக்குப் பிறகு தனது கட்டுப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தும் முயற்சிகளை முடுக்கிவிட்டார்.

## ஈரானில் கொரோனாவிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 3 லட்சத்தைத் தாண்டியது!

ஈரானில் கொரோனா வைரஸ் (கொவிட் - 19) தொற்றால், குணமடைந்தவர்களின் எண்ணிக்கை மூன்று லட்சத்தைக் கடந்தது.

அண்மைய உத்தியோகபூர்வ புள்ளிவிவரங்களின் படி, ஈரானில் மூன்று லட்சத்து இரண்டாயிரத்து 528 பேர் குணமடைந்துள்ளனர்.

கொவிட் - 19 தொற்றால் அதிக பாதிப்பை எதிர்கொண்ட 11 ஆவது நாடாக விளங்கும் ஈரானில், இதுவரை மொத்தமாக மூன்று லட்சத்து 50 ஆயிரத்து 279 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும், இதுவரை 20 ஆயிரத்து 125பேர் மொத்தமாக உயிரிழந்துள்ளனர்.



கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டும் அங்கு இரண்டாயிரத்து 444 பேர் பாதிக்கப்பட்டனர், 153 பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போதுவரை அங்கு 27 ஆயிரத்து 626 பேர் வைரஸ் தொற்றுக்காக மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதில் மூவாயிரத்து 868 பேர் தீவிர சிகிச்சைப் பிரிவில் உள்ளனர்.

# கொரோனாவிலிருந்து மேலும் ஐவர் விடுதலை!

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மேலும் 5 பேர் குணமடைந்து இன்று (வியாழக்கிழமை) வைத்தியசாலைகளில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இதனையடுத்து கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 765 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை இலங்கையில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 902 ஆக பதிவாகியுள்ளது.

இவர்களில் 2 ஆயிரத்து 765 பேர் குணமடைந்துள்ள நிலையில், 126 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அதேநேரம், இந்த தொற்று காரணமாக சிகிச்சை பலனின்றி 11 பேர் இதுவரையில் உயிரிழந்துள்ளனர்.

மேலும் கொரோனா வைரஸ் தொற்று சந்தேகத்தில் நாடளாவிய ரீதியில் உள்ள வைத்தியசாலைகளில் 97 பேர் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வடபிராந்திய போக்குவரத்து முகாமையாளரை கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய உத்தரவு

மன்னாரில் இலஞ்சம் பெற்றார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வட பிராந்திய முகாமையாளரை எதிர்வரும் 27 ஆம் திகதி கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்று (புதன்கிழமை) மன்னார் நீதிமன்றத்தில், வட பிராந்திய முகாமையாளரை லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் முன்னிலைப்படுத்தினர்.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் எம்.கணேசராஜா, லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகள் மன்றில் முன்வைத்த விண்ணப்பங்களை பரிசீலனை செய்தார்.

அதனைத் தொடர்ந்து சந்தேகநபரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டமையோடு, அன்றைய தினமே சிறைச்சாலை அதிகாரிகள் ஊடாக கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலையாக்குமாறு உத்தரவிட்டார்.

இலங்கை அரச போக்குவரத்து சேவையின் வட பிராந்திய முகாமையாளர், நபர் ஒருவரிடம் முறைப்பாடு ஒன்றை சீர்செய்வதற்கு என 60 ஆயிரம் ரூபா பணத்தை மன்னாரில் வைத்து லஞ்சமாகப் பெற்ற நிலையில் லஞ்ச ஊழல் ஆணைக்குழு அதிகாரிகளால் அவர் கைது செய்யப்பட்டார் எனக் கூறப்பட்டது குறிப்பிடத்தக்கது.

# தமிழ் முற்போக்கு கூட்டணி போட்டியிடும் மாகாணங்கள்

## மனோ கணேசன் தெரிவிப்பு



நடைபெறவுள்ள மாகாண சபைத் தேர்தலில் எந்தெந்த மாவட்டங்களில் தமிழ் முற்போக்கு கூட்டணி போட்டியிடவுள்ளதென்ற அறிவிப்பை அதன் தலைவர் மனோ கணேசன் வெளியிட்டுள்ளார்.

அதற்கமைய நுவரெலியா, கொழும்பு, கண்டி, பதுளை, இரத்தினபுரி, கேகாலை, கம்பஹா, மாத்தளை, களுத்துறை, புத்தளம் ஆகிய மாவட்டங்களில் தமிழ் முற்போக்கு கூட்டணி போட்டியிடும் என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக முகப்புத்தகத்தில் பதிவிட்டுள்ள அவர், ஒவ்வொரு மாவட்டங்களின் கள நிலைமைகளையும் தனித்தனியாக ஆராய்ந்து, தனித்தோ அல்லது ஐக்கிய மக்கள் சக்தியில் கூட்டணியாகவோ அல்லது வேறு நட்பு கட்சிகளுடன் கூட்டாகவோ தமிழ் முற்போக்கு கூட்டணி களமிறங்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள அனைத்து மாகாணங்களுக்குமான ஆட்சி காலம் நிறைவடைந்துள்ள நிலையில், விரைவில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# அதிரடிப் படையின் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது

பொலிஸ் போதைப் பொருள் தடுப்பு பிரிவினரால் கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப் பொருள் கடத்தல் காரர்களுக்கே மீள் விற்பனைசெய்தமை தொடர்பிலான விவகாரத்தில், பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு உள்ள தொடர்பு வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அதிரடிப் படையின் சப் இன்ஸ்பெக்டர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் பொலிஸ் விடே அதிரடிப் படை முகாமின், உளவு மற்றும் நடவடிக்கை பொறுப்பதிகாரியாக செயற்பட்ட சப் இன்ஸ்பெக்டரான அஜித் பிரேமலால் என்பவரே இவ்வாறு சி.ஐ.டி. எனப்படும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரால் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை தற்போது நான்காம் மாடியில் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க பயங்கரவாத தடை சட்டத்தின் 6 (1) ஆம் பிரிவின் கீழ் தடுத்து வைத்து விசாரணை செய்துவருவதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜாலிய சேனாரத்ன கூறினார்.

பாரிய போதைப் பொருள் கடத்தல்காரர்கள் மற்றும் பாதாள உலகத் தலைவர்களுடன் இணைந்து போதைப் பொருள் கடத்தல், விற்பனையில் ஈடுபட்டமை, ஆயுதங்களை ஒன்றுதிரட்டியமை தொடர்பில் இந்த விசாரணைகள் இடம்பெறுகின்றன எனவும், பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவின் அதிகாரிகள் கைது செய்யப்பட்ட விவகாரத்தில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு அமைய அவர் கைது செய்யப்பட்டார் எனவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சர் ஜாலிய சேனாரத்ன சுட்டிக்காட்டினார்.

“பொலிஸ் போதைப் பொருள் தடுப்புப் பிரிவினரால் கைப்பற்றப்பட்ட ஹெரோயின் போதைப் பொருளை கடத்தல்காரர்களுக்கே மீள விற்பனை செய்தமை தொடர்பில் கைது செய்யப்பட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவின் அதிகாரிகளுக்கு பொலிஸ் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த சில அதிகாரிகள் ஆதாரங்களுடன் பாதுகாப்பு பெற்றுக் கொடுத்துள்ளமை தெரியவந்துள்ளது. அவர்களையும் விரைவில் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துவோம்.” – என பிரதி சொலிஸ்டர் ஜெனரால் திலீப் பீரிஸ் கொழும்பு பிராதான நீதிவான் லங்கா ஜயரத்னவிடம் கடந்த ஜூலை 21ஆம் திகதி நீதிமன்றில் வைத்து அறிவித்திருந்தார்.

இவ்வாறான பின்னணியிலேயே, சி.ஐ.டி.யின் உதவி பொலிஸ் அத்தியட்சர் மெரில் ரஞ்சன் லமாஹேவாவின் கீழான சிறப்புக் குழு நேற்றுமுன்தினம் சி.ஐ.டி.க்கு குறித்த அதிரடிப் படை வீரரை அழைத்து நள்ளிரவு வரையிலும் விசாரணை நடத்திய பின்னர் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு அமைவாக பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ் நேற்று முன்தினம் இரவு 10.30 மணியளவில் அந்த சப் இன்ஸ்பெக்டரைக் கைது செய்துள்ளது.

தெற்கிலிருந்து கொழும்புக்கு, போதைப்பொருளை கொண்டுவரவும், சில போலியான ஹெரோயின் சுற்றி வளைப்புக்களை முன்னெடுக்கவும் கைது செய்யப்பட்டுள்ள போதைப் பொருள் தடுப்புப் பிரிவினருடன் இணைந்து எஸ்.ரி.எவ். அதிகாரிகள் சிலர் செயற்பட்டுள்ளமை வெளிப்படுத்தப்பட்டுள்ள நிலையிலேயே இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான பின்னணியில் இந்த விவகாரத்தில் இதுவரை 24 பேர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர்களில் 11 பேர் பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் தடுத்து வைத்து விசாரிக்கப்பட்டு வருகின்றனர். ஏனைய 13 பேர் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வெளிநாடுகளில் சிக்கிய பலர் இலங்கை மீண்டனர்

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் பலர் நாட்டை வந்தடைந்துள்ளனர்.

அவர்கள் அனைவரும் இன்று (வியாழக்கிழமை) காலை கட்டுநாயக்க மற்றும் மத்தள விமான நிலையங்களை வந்தடைந்தனர்.

குவைத், ஐக்கிய அரபு இராச்சியம், கட்டார் மற்றும் இந்தியாவில் தங்கியிருந்த இலங்கையர்கள் 745 பேரே இவ்வாறு நாட்டை வந்தடைந்தனர்.

அதன்படி கட்டார், டோஹாவிலிருந்து 20 இலங்கையர்கள் அதிகாலை 1.31 மணியளவில் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

இந்தியாவின் சென்னையிலிருந்து 290 இலங்கையர்கள் அதிகாலை 5.08 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அதேபோல குவைத்திலிருந்து 266 இலங்கையர்கள் அதிகாலை 4.22 மணியளவில் மத்தள சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்தனர்.

அதேவேளை, ஐக்கிய அரபு எமிரேட்ஸிலிருந்து 169 இலங்கையர்கள் மத்தள விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

நாட்டை வந்தடைந்த அனைவருக்கும் விமான நிலையங்களில் வைத்து பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, பரிசோதனை முடிவுகள் வரும் வரையில் அவர்கள் அனைவரையும் விமான நிலையத்தை அண்மித்த பகுதியில் உள்ள ஹோட்டல்களில் தங்கவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ராஜாங்க உயர்கல்வி அமைச்சர் நியமனம் குறித்து அரசு ஆராய்வு

உயர்கல்வி ராஜாங்க அமைச்சர் பதவிக்குப் பொருத்தமான நபரை நியமிப்பது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

இந்தப் பதவிக்கு விஜயதாஸ ராஜபக்ஷ முதலில் நியமிக்கப்பட்டார். ஆனால் அவர் அந்தப் பதவியை ஏற்க மறுத்துவிட்டார்.

தான் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுப் பதவியைத் தவிர ராஜாங்க அமைச்சுப் பதவியை ஒருபோதும் வகித்ததில்லை என விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், விஜேதாச ராஜபக்ஷ இந்த பதவியை ஏற்கவில்லை என்றால், பொருத்தமான மற்றொரு நபரை நியமிக்க அரசாங்கம் பரிசீலித்து வருகிறது.

# ஈஸ்டர் தாக்குதல் குறித்து மைத்திரி முன்கூட்டியே அறிந்திருக்கவில்லை

## நிலந்த ஜயவர்தன சாட்சியம்

அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் நிலந்த ஜயவர்தன, கடந்த வருடம் ஏப்ரல் 21ஆம் திகதி நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் நேற்றும் சாட்சியமளித்தார்.

தாக்குதல் தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன முன்கூட்டியே அறிந்திருக்கவில்லை என்று அவர் தமது சாட்சியத்தில் தெரிவித்துள்ளார்.

தாக்குதல் தொடர்பில் 2019 ஆம் அண்டு ஏப்ரல் 4 ஆம் திகதி வெளிநாட்டு புலனாய்வுத் தகவல் கிடைத்தாலும் அது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதிக்கு அறிவிக்கப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 12 ஆம் திகதி அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மட்டக்களப்புக்கு மேற்கொண்ட விஜயத்துக்கும், குறித்த புலனாய்வுத் தகவலுக்கும் தொடர்பில்லை என்பதால், தாக்குதலுக்கு முன்னர் ஜனாதிபதிடம் கையளிக்கப்பட்ட புலனாய்வுத் தகவல் கோவையில் அந்த தகவல்கள் உள்ளடக்கப்படாமையே அதற்கான காரணம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மக்களுக்கு சேவையாற்ற கூட்டமைப்பால் முடியாது அதனாலேயேதான் அதிலிருந்து விலகிச் சென்றேன்

## தனது நிலைமையைத் தெளிவுபடுத்துகின்றார் வியாழேந்திரன்

கொழும்பு, ஓக.20

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்ந்த பிரச்சினையில் நான் மூக்கை நுழைக்க விரும்பவில்லை. நான் கூட்டமைப்பை விட்டு வெளியேறியமை, கூட்டமைப்பில் இருந்தால் மக்களுக்கு எதுவும் செய்யமுடியாது என்பதற்காகவே என தபால் தொடர்புகள், வெகுசன ஊடகத் தொழில் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் இப்போது தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லாதிருக்கிறது. தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவிக்கு கலையரசனின் பெயரைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவு செய்த நிலையில் மாவை சேனாதிராசாவுக்கு அந்த பதவி வழங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது தொடர்பில் எழுப்பபப்பட்ட கேள்விக்குப் பதில் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர் –

இது தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்ந்த பிரச்சினை,



இதில் நான் மூக்கை நுழைக்க விரும்பவில்லை. இருந்தாலும் ஒரு கேள்வி முன்வைக்கப்படும் போது ஓர் அபிப்பிராயத்தையும் கூறியாக வேண்டும்.

ஒரு தமிழ் மாவட்டம் தமிழ்ப் பிரதிநிதித்துவம் இல்லாதிருக்கும் போது அதற்கே முதலிடம் கொடுக்கப்பட வேண்டும்.– என்றார்.

மேலும், தமிழ் தேசியக் கூட்டமைப்பினூடாக அரசியலுக்கு வந்து அதிலிருந்து விலகியமை தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.

கட்சி அரசியல் என்பது மக்களின் தேவைகளையும் அபிலாகைகளையும் நிறைவேற்றும் பயணத்திற்குத் துணை புரியும் ஒரு சாதனம்.

அந்தச் சாதனத்தால் நமது தேவையை அடைய முடியாதென நமக்குத் தெரியும் போது எம்மால் அப்பாதையில் பயணிக்க முடியாது.

அப்படியாயின் மாற்று வழியொன்றைத் தேடவேண்டும். எந்த மக்கள் என்னைத் தெரிவு செய்தார்களோ அந்த மக்களின் தேவையைப் பூர்த்தி செய்வதற்காகவே நான் அதிலிருந்து விலகினேன்.

மக்கள் எத்தனை வருடங்களுக்கு துன்பங்களையும், சோதனைகளையும் தாங்கிக் கொண்டு வாழ்வது? நன்றாகச் சிந்தித்தால் நான் தெரிவு செய்த பாதை சரியானது என்பது புரியும்.– என்றார்.

# 20 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் தகவல் அறியும் உரிமைக்கு முதலிடம்

## அமைச்சர் உதய கம்மன்பில தெரிவிப்பு



கொழும்பு, ஓக.20

19 ஆவது அரசமைப்பு திருத்தத்தில் பல விடயங்களை நீக்கி 20 ஆவது அரசமைப்பு திருத்தத்தை மேற்கொள்ளும்போது தகவல்களை அறிந்துகொள்ளும் உரிமை அடிப்படை உரிமையாக இருப்பது போன்ற விடயங்களைப் பாதுகாப்பது தொடர்பில் கூடுதலாகக் கவனம் செலுத்துவதற்கு அரசு தீர்மானித்துள்ளது.

– இவ்வாறு அமைச்சரவை இணைப் பேச்சாளரான அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்களுடனான சந்திப்பில் அமைச்சர் மேலும் தெரிவிக்கையில் –

விசேடமாக ஜனாதிபதியின் பதவிக்காலத்தை தற்போது 5 வருடங்களுக்கு வரையறுக்கப்படுவதைப் போன்று இதனை அவ்வாறே முன்னெடுப்பபதற்கும் ஒருவர் இரண்டு முறை ஜனாதிபதிப் பதவியை வகிப்பது தொடர்பான விடயங்களிலும் அமைச்சரவையில் இன்று தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

அமைச்சரவைக் கூட்டத்தில் புதிய அரசமைப்புக்கான யாப்பைத் தயாரிப்பது தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது. இதில் திருத்தங்கள் தொடர்பில் முக்கிய தீர்மானங்கள் பல மேற்கொள்ளப்பட்டன. அரசமைப்பு திருத்தம் குறித்து அமைச்சரவை ஆவணம், அமைச்சரவைக் குறிப்பு, திருத்தச்சட்டம் முதலானவை தொடர்பில் மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக ஐந்து அமைச்சர்களைக்கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதே போன்று அமைச்சரவை துணை குழுவொன்றை நியமிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

நீதி அமைச்சர் அலி சப்ரி, கல்வி அமைச்சர் பேராசிரியர். ஜி.எல்.பீரிஸ், தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, மற்றும் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன ஆகியோரும், நானும் (அமைச்சர் உதய கம்மன்பில) இந்த அமைச்சரவைக் குழுவில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் மதிப்பீடுகளை மேற்கொண்டு அமைச்சரவைக்கு அவற்றைச் சமர்ப்பிப்பார்கள்.

புதிய அரசமைப்பைத் தயாரிப்பதற்காக புத்திஜீவிகள் குழுவை நியமிப்பதற்குத் தேவையாயின் அமைச்சரவைக்கு சிபாரிசு செய்வதற்கு அமைச்சரவையினால் நீதி அமைச்சருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்கமைவாக அவர் பெயர் விபரங்களை அமைச்சரவைக்குச் சமர்ப்பிப்பார். நீதி அமைச்சர் திருத்த வரைவுச் சட்டத்தை அமைச்சகத்துக்குச் சமர்ப்பிப்பார் – என்றார்.

# யார் ஐ.தே.க. தலைவரானாலும் நாட்டுக்கு அது நல்லது அல்ல!

## என்கிறார் சரத் பொன்சேகா



'ஐக்கிய தேசியக்கட்சிக்கு யார் தலைவராக தெரிவு செய்யப்பட்டாலும் நாட்டுக்குஅதுநல்லதல்ல' என நாடாளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக, ஐக்கிய தேசியக்கட்சியின் ஆதரவாளர்கள் ஊடாகத்தான் நாம் நாடாளுமன்றத்துக்கு செல்ல இருக்கின்றோம்.

எனினும், ஐக்கிய தேசியக் கட்சியின் பெயர் மற்றும் கட்சியின் பின்புலமொன்று இல்லாமலேயே இம்முறை நாடாளுமன்றத்துக்கு நுழைய இருக்கின்றோம்.

ஐக்கிய தேசியக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, 25 வருடங்களாக கட்சியை சிதைக்கும் வகையில் செயற்பட்டுள்ளார்.

அவரது செயற்பாடுகளின் பிரதிபலன்களைதான் நாம் தற்போது பார்க்கின்றோம்.


மேலும் பலரின் பெயர் கட்சியின் தலைமை பதவிக்கு முன்மொழியப்பட்டிருந்தாலும், எல்லோரும் ஒரே பண்புகளைக் கொண்டவர்கள்தான்.

கட்சியில் யார் வந்தாலும் பெரியதொரு மாற்றம் ஏற்படப் போவதில்லை; கட்சிக்கும் ஒன்றும் ஆகப்போவதில்லை.

நான் நினைக்கின்றேன், இவர்களும் சிறிகொத்தவை கைப்பற்றுவது தொடர்பிலேயே ஆர்வமாக இருப்பார்கள் என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# ஜனநாயகம் பாதுகாக்கப்படும் இடமாகவேண்டும் நாடாளுமன்று!

## இன்றைய அமர்வில் சஜித் வலியுறுத்து




ஜனநாயகரீதியில் பதிவு செய்யப்பட்ட நாடாளுமன்றத்தில் ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

9ஆவது நாடாளுமன்ற அமர்வில் இன்று (வியாழக்கிழமை) கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது புதிய சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேர்வர்தனவிற்கு வாழ்த்து தெரிவித்து தொடர்ந்தும் உரையாற்றிய அவர், மாத்தறை ராகுல வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியை கற்ற நீங்கள் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டத்தைப் பெற்றுள்ளீர்கள். இதேபோன்று நாடாளுமன்ற செயற்பாடுகளிலும் உங்களுக்கு அதிக அனுபவமும் உண்டு.

உங்களது தலைமையில் நாடாளுமன்ற செயற்பாடுகள் பக்கசார்பற்ற முறையில் முன்னெடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

# சானி அபேசேகரவிற்கு விளக்கமறியல் நீடிப்பு!



கொழும்பு, ஓக.20

குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமானஷானி அபேசேகரவை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

அதேநேரம், உப பொலிஸ் பரிசோதகர் ரோஹன மெண்டிஸையும் தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த இருவரையும் இன்று (வியாழக்கிழமை) கம்பஹா நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய அவர்களை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 3ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு கம்பஹா நீ தி வான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

# வேலைகளை உருவாக்குவதே புதிய அரசின் நோக்கம் ஆகும்!

## கொள்கை விளக்க உரையில் ஜனாதிபதி

கொழும்பு, ஓக.20

வேலை வழங்குவதை விட வேலைகளை உருவாக்குவதே புதிய அரசின் நோக்கம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

9 ஆவது நாடாளுமன்றத்தின் வைபவ ரீதியான நிகழ்வு நாடாளுமன்றத்தில் இன்று (வியாழக்கிழமை) இடம்பெற்றது.

அரசியல் யாப்பின் மூலம் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடன உரையை இதன்போது நிகழ்த்தினார்.

அந்த உரையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்–

ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் சபாநாயகராக தெரிவு செய்யப்பட்ட மஹிந்த யாப்பா அபேவர்தன உள்ளிட்ட இன்று புதிதாக தெரிவு செய்யப்பட்டவர்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள். மேலும் வரலாற்று வெற்றிக்கு வித்திட்ட மக்களுக்கும் நன்றி.

புராதன பௌத்த உரிமையைக் காப்பாற்றுவதற்கு முழு நடவடிக்கை எடுக்கப்படும். அதேநேரம் மத உரிமையை காப்பாற்றுவதற்கு பௌத்த மதகுருமார்களின் அறிவுரைகளை கேட்டு வருகிறேன். அதற்கான அமைச் சொன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.

பாரம்பரிய உரிமை, கிராமிய கலை தொடர்பாக விசேட அவதானம் செலுத்தப்படுகிறது. மேலும் போதைப் பொருள், பாதாள உலகக் குழுவிடமிருந்து மக்களைக் காப்பாற்றும் பணியையும் தொடங்கியுள்ளேன்.

உள்நாட்டு உற்பத்தியை வலுவடையச் செய்துள்ளேன். அதனை மெய்ப்பிக்கும் வகையில் தேசிய விவசாயிகளுக்கு இலவச உரம், பயன்படுத்தப்படாத நிலங்களை மீண்டும் பயன்படுத்துவதற்கான வழிவகைகள், கடன் உதவித் திட்டங்கள், குறைந்த வட்டிவீதங்கள் என்பவற்றை அமுல்படுத்தியுள்ளேன்.

சமீப காலமாக நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் பயணம் செய்தபோது மக்களின் அடிப்படைப் பிரச்சினையாக வீடு இல்லாமை காணி பத்திரம் இல்லாமை போன்ற பிரச்சினைகளையே பெரும்பாலானோர் முன்வைத்தனர்.

சுதந்திரம் கிடைத்து 72 ஆண்டுகள் நிறைவடைந்த



போதிலும் நிறைவடையாத இந்த காணிப்பிரச்சினைகளுக்கு முடிவு எட்டப்பட்டு காணிப்பத்திரம் வழங்கப்படும்.

மேலும் நாட்டில் மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளமை யானைகளின் தொல்லைகளால் மக்கள் படும் சிரமங்களே. இந்த நிலையில், இதற்கு குழுவொன்று அமைக்கப்பட்டு இந்த பிரச்சினை தீர்க்கப்படும். நாட்டின் அனைத்து பிரதேசங்களிலும் காணப்படும் நீர் விநியோகப் பிரச்சினை தீர்க்கப்படும்.

பெற்றோரின் எதிர்பார்ப்பாக தங்களது பிள்ளைகளுக்கு சிறந்த கல்வி, தரம் வாய்ந்த பாடசாலை என்பனவே உள்ளன. ஆனால் நாட்டில் உள்ள பெரும்பாலான பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை, புத்தகசாலை மற்றும் மைதானம் இல்லாமை போன்ற பல குறைபாடுகள் உள்ளன.

இந்த தேவைகள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டு மாணவர்களுக்கு சிறந்தொரு எதிர்காலத்தை ஏற்படுத்திக்கொடுக்க அரசாங்கம் முயற்சி செய்யும்.

வேலை வழங்குவதைவிட வேலைகளை உருவாக்குவதே எமது நோக்கம். முதற்கட்டமாக வறுமையில் வாடும் ஒரு லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு பெற்றுத் தரப்படவுள்ளது.

மேலும் அரசாங்க வேலையைப் பெறுபவர்களில் வறுமையில் உள்ளவர்களுக்கே முதலிடம் வழங்கப்படும். அனைத்து பிரதேசங்களில் உள்ளவர்களுக்கும் சமமான அளவில் வேலை வாய்ப்பு வழங்கப்படும். வேலைகளைப் பெற்றுக்கொள்வதற்கு எவ்வித பரிந்துரைகளும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

தேயிலை, றப்பர், தேங்காய் தொழில் செய்பவர்களுக்கு அரசாங்கம் கட்டாயம் உதவி செய்யும். குறிப்பாக தேயிலை தோட்டத் தொழிலாளர்களுக்கு உதவி செய்வதற்கு அரசாங்கம் மிகவும் கவனம் செலுத்தும்.

உலகப் புகழ் பெற்ற சிலோன் டீயின் மதிப்பு தற்போது மங்கியுள்ளது. அதனை புதுப்பொலிவுடன் மீண்டும் உருவாக்கும் முயற்சியை அரசாங்கம் மேற்கொள்ளும்.

இயற்கை எழில் பொங்கும் இலங்கை, பலவிதமான இயற்கை வளங்களைக் கொண்டுள்ள போதிலும் உலக நாடுகளைப்போன்று இலங்கை தமது வளங்களைப் பயன்படுத்தவில்லை.

நாட்டிற்கே உரித்தான உற்பத்திகளான பத்திக், பித்தளை, ஆபரணங்கள் போன்றவற்றை விருத்தி செய்ய வேண்டும் .

கடலால் சூழப்பட்டுள்ள இலங்கைக்கு மீன் இறக்குமதி தேவையில்லை என்பதால், மீன் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன், இலங்கை கடற்பரப்பில் எல்லை தாண்டி மீன் பிடிக்கவும் முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும் நாட்டில் உள்ள அரச அலுவலகங்கள் பலவற்றிற்கு நான் சென்றிருந்தபோது பெரும்பாலும் மக்கள் முன்வைத்த குற்றச்சாட்டு, அரச அலுவலகங்களில் உரிய நேரத்திற்கு சேவைகள் வழங்கப்படவில்லை என்பதே. எனவே அரச அலுவலகங்களில் நேரத்தை வீண்விரயமாக்காமல் செயற்பட பல புதிய வழிமுறைகளை உருவாக்க வேண்டும்.

மக்கள் எதிர்பார்ப்பது போன்று 19 ஆவது சீர்திருத்தம் இல்லாமல் செய்யப்படும். அதற்கு பதிலாக புதிய சீர்திருத்தமொன்று கொண்டுவரப்படும். ஒரே நாடு ஒரே நீதியின் கீழ் அனைத்தும் கொண்டுவரப்படும்.

மதம், இனம், கட்சி அனைத்தையும் கடந்த, ஒரு வளமிக்க சௌபாக்கியமான நாட்டை கட்டியெழுப்ப அனைவரையும் நட்புடன் அழைக்கின்றேன் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

# தமிழர் தீர்வுக்கான தார்மீக பொறுப்பு ஐந்து ராஜபக்ஷக்களுக்கும் உள்ளது!



மகிந்தவுக்கு சங்கரி கடிதம்

ஐந்து ராஜபக்ஷர்களும் இணைந்து பிரச்சினைகளை கையிலெடுத்து அதற்கான தீர்வினைப் பெறுக்கொள்ளும் தார்மீக கடமை காணப்படுவதாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு அவர் இன்று (வியாழக்கிழமை) எழுதியுள்ள கடிதத்திலேயே மேற்படி விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:–

நீங்கள் பிரதம அமைச்சர் பதவியை ஏற்றுக்கொண்டமைக்கு எனது உள்ளங்கனிந்த வாழ்த்துக்கள். இப்பதவி தங்களுக்கு புதிதல்ல என்பதையும் அனைவரும் அறிவோம்.

2007ஆம் ஆண்டு மாசி மாதம் 4 ஆம் திகதி காலிமுகத்திடலில் 59 ஆவது சுதந்திரதின விழாவில் நீங்கள், என்னையும் டக்ளஸ் தேவானந்தாவையும் குறிப்பிட்டு ஆற்றிய உரையின் பகுதியை தங்களிற்கு ஞாபகமூட்டுவதற்காக இங்கே தந்துள்ளேன்.

'தமிழ், இஸ்லாமிய மக்களின் உயிர்களையும், சொத்துக்களையும் பாதுகாக்க வேண்டியது எமது கடமை. அத்துடன் அவர்களின் பிள்ளைகளின் எதிர்கால உலகத்தை வளம்பெற வைக்க வேண்டும், என்று மொறக்ககாகந்த மகா சமுத்திர திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட போது நான் கூறியமையை, மீண்டும் வற்புறுத்தி கூறுவது யாதெனில், பயங்கரவாதத்தை இல்லாமல் செய்வதற்கு மிகப்பொருத்தமான ஆயுதம் அப்பாவித் தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவதே.

அதற்கு தற்போது தென்னிலங்கை சிங்கள மக்கள் தயாராகிவிட்டார்கள். விடுதலைப் புலிகளின் வெறித்தனமான வேண்டுகோளிற்கு இடமளியோம். இருப்பினும் நாம் நியாயமாகவும் நேர்மையாகவும் நடப்பின் குறைந்தபட்சம் ஆனந்தசங்கரி, டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களுடன் இசைந்து செயற்பட வேண்டும்'

என்னைப்பற்றி குறிப்பிட்டதில் இருந்து உங்கள் சிந்தனை என்ன என்பதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. எனது ஞாபகசக்திக்கு எட்டியவகையில் உங்களைப் போன்ற தரத்தில் உள்ள ஒருவர் பிரச்சினையையும் கூறி அதற்குரிய தீர்வையும் குறிப்பிட்டமை முதற் தடவையாகும்.

ஆகவே, ஐந்து ராஜபக்ஷர்களாகிய நீங்கள், சுயமாக முன்வந்து பிரச்சினையை கையில் எடுத்து அதற்கு தீர்வு காண வேண்டிய தார்மீக கடமையை புரிந்து, உங்களின் மூதாதையர்களின் நற்பெயரை காப்பாற்றி அவர்களின் ஆத்மா சாந்தியடைய வைப்பீர்கள் என நம்புகின்றேன்.

தேசபிதாவினுடைய கௌரவத்தை பாதுகாக்க வேண்டிய கடமை இன்று ராஜபக்ஷர்களுடைய கையில் தான் உள்ளது என கடிதத்தில் அந்தக் கடிதத்தில் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# இரு வர்த்தக நிலையங்கள் நுவரெலியாவில் திருட்டு!

நுவரெலியா – கொட்டகலை, வூட்டன் நகரில் அமைந்துள்ள சில்லறை கடை மற்றும் சமையல் எரிவாயு நிரப்பும் நிலையம் ஆகியவற்றில் இன்று (வியாழக்கிழமை) அதிகாலை, திருடர்கள் சிலரால் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தில் சில்லறை கடையொன்றில் சிகரட், பணம் மற்றும் மூன்று இலட்சம் ரூபாய் பெறுமதியான பொருள்களும் சமையல் எரிவாயு நிரப்பும் நிலையத்தில் 70 ஆயிரம் ரூபா பணமும் திருடப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், கடைகளின் முன்புறத்திலுள்ள இரும்பு கதவை உடைத்து, முன் வழியாக கடைக்குள் திருடர்கள் நுழைந்துள்ளனர் என பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை தேடி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வட்டி வீதங்கள் குறைப்பு மத்தியவங்கி அறிவிப்பு!

தங்கக்கடன் அடகு, கடனட்டை என்பவற்றுக்கான வட்டி வீதத்தில் மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கியின் நிதிச்சபை அறிவித்துள்ளது.

இதன்படி கடனட்டைகளுக்கான அதிகபட்ச வட்டியை 18 வீதமாக குறைப்பதற்கும், தங்கக்கடன் அடகு வட்டியை 10 வீதமாக குறைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை வங்கிமேலதிக பற்றுக்கான வட்டி 16 வீதமாக குறைக்கப்பட்டுள்ளதுடன், தற்போதைய கொள்கை வட்டி வீதத்தை மாற்றமின்றி பேணுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, நிலையான வைப்புக்கான வட்டி 4.5 வீதமாகவும் நிலையான சலுகை கடன் வட்டி வீதம் 5.5 வீதமாகவும் காணப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.08.2020 இல் வெளியிடப்பெற்றது.